Type your text

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022**

**தரம் ஐந்து மாணவர்களுக்கான**

# முன்னோடிப் பரீட்சை - இல-01


# வினாத்தாள் - I

சுட்டெண்:- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம்


- **பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.**
  - உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
  - மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
  - இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.
  - ஒவ்வொரு வினாவிற்கும் மூன்று விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
  - செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

---


(01) 

அருகில் தரப்பட்டுள்ள உருவின் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(02) 



இத்திண்மத்தை முறிந்த கோட்டின் வழியே இரண்டு துண்டுகளாக வெட்டுவதன் மூலம் கிடைக்கும் முகத்தின் வடிவம்,

(1)  (2)  (3) 




(03) கீழே தரப்பட்டுள்ள சொற்களுடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்ட உருவைத் தெரிவு செய்க.


**மிதக்கும் - வெடிக்கும் - அலங்காரம்**

(1)  (2)  (3) 

(04) 



வட்ட வடிவக் கடதாசியொன்றை நான்காக மடித்து துளையிடப்பட்டுள்ள முறை மேலே காட்டப்பட்டுள்ளது. அதன்படி, அக்கடதாசித் துண்டை விரித்தால் காணக்கிடைக்கும் உரு,

(1)  (2)  (3) 




(05) 



இரண்டு பாத்திரங்களிலும் உள்ள பந்துகளின் எண்ணிக்கை ஒன்றுக்கொன்று சமமாவதற்கு A பாத்திரத்திலிருந்து B பாத்திரத்திற்கு இட வேண்டிய பந்துகளின் எண்ணிக்கை,

(1) 3 (2) 4 (3) 2

(06) 

இவ்வாளியில் அம்புக்குறி காட்டும் திசையிலிருந்து பார்த்தால் புலப்படும் முறை,


(1)  (2)  (3) 

(07) 

சதுரமுகிகள் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கப்பட்டுள்ள முறையை இவ்வுரு காட்டுகிறது. அதன்படி, இக்குவியலில் வைக்கப்பட்டுள்ள மொத்த சதுரமுகிகளின் எண்ணிக்கை,

(1) 10 (2) 14 (3) 13


kalvi.lk


(08) 


இவ்வுருவில் காணப்படும் சம அளவிலான 15 சிறிய முக்கோண வடிவங்களும் கம்பித்துண்டுகளினால் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் ஒரு சிறிய முக்கோண வடிவத்தின் ஒரு பக்க நீளம் 4cm ஆகும். அதன்படி, இவ்வுருவை அமைப்பதற்குத் தேவைப்படும் 4cm நீளம் கொண்ட சிறிய கம்பித்துண்டுகளின் எண்ணிக்கை,


(1) 28 (2) 26 (3) 30

(09) வித்தியாசமான உருவைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 


(10) 


எண் கோலத்தை அவதானித்து வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை தெரிவு செய்க.,




(1) 4 (2) 7 (3) 6

(11) குறித்த வருடமொன்றில் பெப்ரவரி மாதத்தின் 1 ஆம் திகதி புதன்கிழமையாகும். அம்மாதத்தின் இறுதி நாள் புதன்கிழமையாகும். அதன்படி, அம்மாதத்தில் இருக்கும் நாட்களின் எண்ணிக்கை,

(1) 28 (2) 30 (3) 29

(12) 

கூடுகளினுள் உள்ள உருக்கள் ஒரு கோலத்திற்கேற்ப வரையப்பட்டுள்ளன. அதன்படி, வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

(1)  (2)  (3) 

(13) ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத சொற்கள் இடம்பெற்றுள்ள அடைப்பைத் தெரிவு செய்க.

(1) வாள் / கத்தரிக்கோல் / கத்தி

(2) கரப்பந்து / வாகனம் / பறவைகள்


(3) மாணவர் / புத்தகம் / ஆசிரியர்

(14) ரூபாய் 2.00 நாணயக் குற்றி, ரூபாய் 5.00 நாணயக் குற்றி, ரூபாய் 10.00 நாணயக் குற்றி என்பன சமனான தடவைகள் வீதம் மேலே சுண்டிவிடப்பட்டன. ஒவ்வொரு நாணயக் குற்றியினதும் A பக்கம், B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கைகள் கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நாணயக் குற்றி | A பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை | B பக்கம் விழுந்த தடவைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ரூபாய் 2.00 நாணயக் குற்றி | 9 | 7 |
| ரூபாய் 5.00 நாணயக் குற்றி | 12 | 6 |
| ரூபாய் 10.00 நாணயக் குற்றி | 8 | 10 |

அட்டவணையின்படி, விழுந்த தடவைகளின் எண்ணிக்கை பிழையாக எழுதப்பட்டுள்ள நாணயக் குற்றியைத் தெரிவு செய்க.


(1) ரூபாய் 2.00 (2) ரூபாய் 5.00 (3) ரூபாய் 10.00


(15) 


இவ்வுருவில் காணக்கிடைக்கும் முக்கோணங்களின் எண்ணிக்கை,


(1) 4 (2) 5 (3) 6

(16) பந்துகள், சிவப்பு நிறப் பந்துகள், சிறிய சிவப்பு நிறப் பந்துகள் என்பவை காட்டப்பட்டுள்ள உரு,

(1) 

(2) 

(3) 


(17) 


இத்தராசு சமநிலையடைவதற்கு B பக்கத்திற்குச் சேர்க்க வேண்டிய நிறை,

(1) 5kg (2) 6kg (3) 4kg

kalvi.lk

சுட்டெண்:........................................

(18) 


இக்கனவுருவில் இருக்கும் செவ்வக வடிவான முகங்களின் எண்ணிக்கை,

(1) 3 (2) 4 (3) 6

(19) 


எனின், இந்நான்கு குறியீடுகளையும் பயன்படுத்தி எழுதக்கூடிய மிகக்குறைந்த பெறுமதியுள்ள எண்ணைக் காட்டும் குறியீடுகள்,


(1)  (2)  (3) 

(20) கடிகாரமொன்றின் செக்கன் முள் $\frac{1}{2}$ மணித்தியாலத்தில் சுழலும் தடவைகளின் எண்ணிக்கை,

(1) 30 (2) 60 (3) 15

(21) உரு A 

உரு A யினால் காட்டப்பட்டுள்ள கடதாசிக் கீலத்தை விரிக்கும்போது மடித்த இடங்களைச் சரியாகக் காட்டும் உரு,

(1)  (2)  (3) 

(22) பிராணியொன்றில் எப்போதும் இருப்பது,

(1) கால்கள் (2) வால் (3) நிறை


(23) நாளை மறுதினம் திங்கட்கிழமை எனின், நேற்று முன்தினம்,

(1) வியாழக்கிழமை (2) வெள்ளிக்கிழமை (3) புதன்கிழமை

(24) பின்வரும் எண்கோலத்திலுள்ள இரு வெற்று கூடுகளுக்குப் பொருத்தமான எண்கள் முறையே,

1 , 2 , 4 , 8 , [ ] , 32 , [ ]

(1) [18] , [60] (2) [16] , [64] (3) [12] , [48]

(25) 



இச்செவ்வக வடிவான கம்பிச்சட்டகத்தை P எனும் இடத்தில் வெட்டி விரிப்பதன் மூலம் கிடைக்கும் கம்பியின் நீளம்,

(1) 16cm (2) 8cm (3) 14cm

(26) அடைப்புகளுக்குள் உள்ள இரு உருக்களையும் ஒன்றன் மீது ஒன்றாக வைக்கும்போது கிடைக்கும் ஆங்கிலச் சொல்,






(1) NET (2) FAN (3) TEN

(27) 

அருகே தரப்பட்டுள்ள வடிவத்தைச் சதுர வடிவமாக மாற்றுவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய சிறிய சதுர வடிவங்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை,

(1) 4 (2) 5 (3) 3

(28) பின்வரும் பொருட்களின் விலைகளைப் பரிசீலித்துப் பார்க்குக.

 = ரூபாய் 50.00  = ரூபாய் 30.00  = ரூபாய் 60.00

இவ்விலைகளின்படி, புத்தகமொன்றின் விலை,

(1) ரூபாய் 30.00 (2) ரூபாய் 40.00 (3) ரூபாய் 25.00

(29) எனக்குச் சகோதரர்கள் 4 பேரும், சகோதரிகள் 3 பேரும் உள்ளனர். அதன்படி, எனது பெற்றோருக்கு இருக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை,

(1) 7 (2) 9 (3) 8



kalvi.lk


(30) குறித்த வருடமொன்றில் குறிப்பிட்ட மாதத்தின் சரிநடுவில் வரும் திகதி 16 ஆகும். அதன்படி, அம்மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கை,

(1) 30 (2) 31 (3) 29

(31) 

தரப்பட்ட உருக்களின் மீது மை பூசப்பட்டு எதிரே அச்சிடப்படுமாறு முறிகோடு வழியே தாளை இரண்டாக மடித்து விரிக்கும்போது கிடைக்கும் உரு,

(1) 
(2) 
(3) 

(32) 


நான்கு பிள்ளைகள் சதுர வடிவில் நின்று கொண்டிருக்கும் முறையை இவ்வுரு காட்டுகிறது. ரவிக்கு சுனிலைத் தென்படுவது கிழக்குத் திசையிலாகும். அதன்படி, ரவிக்கு சிவாவைத் தென்படுவது,


(1) தெற்குத் திசையில் (2) வடக்குத் திசையில் (3) மேற்குத் திசையில்

(33) பின்வரும் பாடலை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாவிற்கான விடையைத் தெரிவு செய்க.

கற்பிப்போர் கண்கொடுப்போரே! - அந்தக்
கணக்காயர் உரையினில் இரு செவி சேரே!
நற்பெயர் எடுத்திட வேண்டும்! - நாளும்
நன்றாகப் படித்து நீ முன்னேற வேண்டும்!


இப்பாடலில் "கணக்காயர்" என்று கூறப்பட்டுள்ளது,

(1) கணக்காளர் (2) வைத்தியர் (3) ஆசிரியர்

(34) 



இக்கூட்டினுள் உள்ள 4 எண்களையும் பயன்படுத்தி அமைத்துக்கொள்ளக்கூடிய நான்கு இலக்கங்களைக் கொண்ட 1500 இற்கும் குறைந்த எண்களின் எண்ணிக்கை,

(1) 2 (2) 3 (3) 4

(35) 

இவ்வுருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின்,


(1) $\frac{2}{8}$ (2) $\frac{1}{6}$ (3) $\frac{1}{7}$

(36) 


குமார் A யிலிருந்து B, C மற்றும் D ஊடாக E வரை பயணித்தான். வசீம் A யிலிருந்து F ஊடாக E வரை பயணித்தான். அதன்படி, கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் சரியான கூற்றைத் தெரிவு செய்க.

(1) வசீமை விட அதிக தூரம் குமார் பயணித்துள்ளான்.
(2) குமாரை விட அதிக தூரம் வசீம் பயணித்துள்ளான்.
(3) இருவரும் பயணித்த தூரங்கள் சமமாகும்.

(37) பிள்ளையொன்று மாபிள்களைப் பயன்படுத்தி கீழே உருக்களினால் காட்டப்பட்டுள்ளவாறான கோலங்களை அமைத்தது.





இக்கோலத்தின்படி, 4 ஆவது சந்தர்ப்பத்தில் கோலத்தை அமைக்கத் தேவைப்படும் மாபிள்களின் எண்ணிக்கை,

(1) 20 (2) 22 (3) 18

(38) கீழே தரப்பட்டுள்ள முதல் இரண்டு சொற்களுக்கும் இடையே ஏதோவொரு தொடர்புண்டு. அதேபோன்ற தொடர்பினைக் கொண்ட சொற்சோடி,

**நான்முகிக்கு - முக்கோணி போல**

(1) கோளத்திற்கு - வட்டம் (2) சதுரமுகிக்கு - சதுரம் (3) உருளைக்கு - செவ்வகம்

(39) 

அருகே தரப்பட்டுள்ள இரு உருக்களிலும் நிழற்றப்பட்டுள்ள சிறிய சதுர வடிவங்களை ஒன்றன் மீது ஒன்று அமையக்கூடிய வகையில் வைத்ததன் பின்னர் காணக்கிடைக்கும் சிறிய சதுர வடிவங்களின் எண்ணிக்கை,

(1) 18 (2) 21 (3) 20

(40) சுவரொன்றைக் கட்டுவதற்கு 2 மனிதர்களுக்கு 6 நாட்கள் தேவைப்படும். அதன்படி, அச்சுவரை 3 நாட்களில் கட்டுவதற்குத் தேவைப்படும் மனிதர்களின் எண்ணிக்கை,

kalvi.lk

(1) 3 (2) 6 (3) 4

மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத்
தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை - 2022
தரம் ஐந்து மாணவர்களுக்கான

# முன்னோடிப் பரீட்சை - இல-01

# வினாத்தாள் - II

சுட்டெண் :- ..............................................

நேரம் :- 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

● பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்.
* உமது சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.
* இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
* எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக.
* விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
* விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**(01) பின்வரும் பந்தியை வாசித்து, வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.**

குமார் மாலைநேர வகுப்புக்கு தனது தாயாருடன் சென்றான். அப்போது பாதையோரத்தில் சிறிய பூனைக்குட்டியொன்று கத்தியபடி இருந்தது. பாசத்துடன் அப்பூனைக்குட்டியைத் தூக்கி எடுத்தான். அவன் "அம்மா இந்த பூனைக்குட்டி பாவம் வீட்டுக்குக் கொண்டு போவோமா?" என்று கேட்டான். அம்மாவும் சரியெனக் கூறியதால் அவன் மகிழ்ச்சியடைந்தான்.

(i) பந்தியில் வந்துள்ள காலப்பெயர் ஒன்றை எழுதுக. ..............................................

(ii) பந்தியில் வந்துள்ள பெயரடைமொழிச் சொல்லொன்றை எழுதுக. ..............................................

(iii) "புண்ணியம்" என்பதன் எதிர்ப்பதத்தினை பந்தியிலிருந்து தெரிவு செய்து எழுதுக. ..............................................

(iv) பாதையோரத்தில் என்பதைப் பிரித்து எழுதுக. ..............................................

(v) உயர்திணை, பெண்பால், பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. ..............................................

Education
கல்வி
අධ්‍යාපන

**(02) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான பயனிலையை அடைப்பிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) தம்பியும் தங்கையும் கடைக்குப் .............................. (போனார்கள் / போனோம்)

(ii) கண்களில் இருந்து கண்ணீர் .............................. (கசிந்தன / கசிந்தது)

(iii) தன்னுடைய 'கதைப்புத்தகத்தைக் காணவில்லை என்று அழுதா .............................. (அழுதாள் / அழுதது)

**(03) பின்வரும் சொற்தொகுதிகள் ஒவ்வொன்றிலும் சரியாக எழுத்துக் கூட்டப்பட்டுள்ள சொல்லைத் தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(i) புல்லாங்குழல் / புள்ளாங்குழல் / புல்லாங்குளல்.

(ii) ஒன்றினைப்பு / ஒன்றிணைப்பு / ஒன்றினைப்பு

(iii) பல்களைக்கலகம் / பல்கலைக்கழகம் / பழ்கலைக்களகம்

**(04) பின்வரும் ஒவ்வொரு சொல்லையும் வைத்து வாக்கியம் அமைக்குக.**

(i) வளி :- ..............................................

(ii) வழி :- ..............................................

**(05) பின்வரும் தொடர் வாக்கியத்தைத் தனி வாக்கியங்களாக மாற்றி எழுதுக.**

கமல் மரத்தில் ஏறிப் பூப்பறித்தான்.

(i) .............................................. (ii) ..............................................

**(06) இடைவெளிகளுக்குப் பொருத்தமான ஒலிமரபுச் சொற்களின் கீழ்க் கோடிடுக.**

(i) ஆடு :- .............................. (குரைக்கும் , கத்தும் , பேசும்)

(ii) குதிரை :- .............................. (அகவும் , உறுமும் , கனைக்கும்)

**(07) பின்வரும் பழமொழியின் மீதிப் பகுதியினைப் பூரணப்படுத்துக.**

அகத்தின் அழகு ..............................................

**(08) பின்வரும் இணைமொழிகளைப் பூர்த்தி செய்க.**

(i) ஏழை .............................. (ii) எலும்பும் ..............................

kalvi.lk

(09) பின்வரும் சொற்களை ஒழுங்கிபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

படிப்பித்தார் / வகுப்பிற்கு / பாடம் / வந்து / ஆசிரியர் :- ..........................................................................

**(10) பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுதுக.**

சிறுவன் மைதானத்தில் விளையாடினான் :- ..........................................................................

**(11) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தினதும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**


(i) I ..................(has / have) a bicycle. (ii) Where ..............................(is / are) my book?

**(12) பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) What is that? :- .................................................. (ii) I am hungry :- ..................................................

**(13) பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.**

(i)  :- ..................................................

(ii)  :- ..................................................

**(14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய கருத்துக்களைத் தமிழில் எழுதுக.**

(i) பாசல :- .................................................. (ii) ரோஹல :- ..................................................

**(15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

எனது பெயர் சமன் :- ..........................................................................


(16) 8 இற்குப் பின்னுள்ள எண்ணை உரோம எண்குறிகளில் எழுதுக. ..................................................

(17) (i) 2 மணித்தியாலங்களில் உள்ள நிமிடங்களின் எண்ணிக்கை யாது? ..................................................

(ii) மணித்தியால முள் 3 இலிருந்து 7 வரை பயணிப்பதற்கு எடுக்கும் நேரம் யாது? ..................................

(18) 2 , 9 , 16 , 23 , 30 , 44 கோலமொன்றை அமைப்பதற்கு இவ்வெண்வரிசைக்குச் சேர்க்கப்பட வேண்டிய எண் யாது?

..........................................................................

(19) 


இவ்வெண்சட்டத்தில் காட்டப்பட்டுள்ள எண்ணைச் சொற்களில் எழுதுக.


..........................................................................

(20)

| | | |
|---|---|---|
| 4 | 9 6 | 3 |


இக்கட்டத்திலுள்ள இலக்கங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை எழுதுக.

..................................

(21) 



இவ்வுருவின்படி, A இனால் காட்டப்பட்டுள்ள திசையை எழுதுக.

..........................................................................

(22) (i) 

இக்கார்ட்போர்ட் துண்டைப் புள்ளிக்கோடுகளின் வழியே மடித்து ஒட்டுவதன் மூலம் அமைத்துக்கொள்ளக்கூடிய திண்மத்தின் பெயரை எழுதுக. ..................................................

(ii) அவ்வாறு தயாரிக்கப்பட்ட திண்மத்திற்கு உதாரணம் ஒன்று தருக. ..................................................

(23) 


இக்கடிகார முகத்தினால் காட்டப்பட்டுள்ள நேரத்திற்கு 25 நிமிடங்களுக்கு முன்னான நேரத்தை எழுதுக. ..................................................

(24)

| | | |
|---|---|---|
| 30 | 35 | 18 |
| 21 | 19 | 29 |
| 37 | 24 | |

இக்கூட்டினுள் உள்ள இலக்கங்களில் 3 இன் மடங்குகளைத் தெரிவுசெய்து எழுதுக.

..........................................................................

(25) கீழே தரப்பட்டுள்ள எண்களைப் பெரிய எண்ணிலிருந்து சிறிய எண் வரையான ஒழுங்கில் (இறங்குவரிசையில்) எழுதுக.

6472 , 7426 , 7624 , 6742 :- ..........................................................................

kalvi.lk


சுட்டெண்:.........................................

(26) ரமேஷ் இரண்டு பப்பாசிப்பழங்களைக் கொள்வனவு செய்து வியாபாரிக்கு ரூபாய் 100.00 நாணயத் தாள்கள் இரண்டைக் கொடுத்தபோது, வியாபாரி ரூபாய் 40.00 ஐ மீதிப்பணமாக ரமேஷிடம் கொடுத்தார். அதன்படி, பப்பாசிப்பழமொன்றின் விலை யாது? ..............................................................................................

(27) (i) "எட்டாயிரத்து நானூற்று எழுபத்தேழு" என்பதை இலக்கங்களில் எழுதுக. ..........................................................................


(ii) வெற்றிடங்களை நிரப்புக. 9567 = 9000 + ....................... + 60 + .................

(28)



இச்சதுரத்தின் சமச்சீர் அச்சுக்களைத் தெளிவாக வரைந்து காட்டுக.

(29)



இவ்வுருவின் $\frac{3}{4}$ ஐ நிழற்றுவதற்கு இன்னும் நிழற்றப்பட வேண்டிய சிறிய முக்கோண வடிவங்களின் எண்ணிக்கை யாது? ..........................................................

*** இலக்கம் (30) தொடக்கம் (59) வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(30) வீதிச் சமிக்ஞைத் தூண்களில் "நிறுத்துக" எனும் கருத்தை வெளிப்படுத்தும் வர்ணம்,
(1) பச்சை (2) சிவப்பு (3) செம்மஞ்சள்




(31) நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணி அல்லாதது,
(1) முதலை (2) தவளை (3) ஓணான்

(32) "காபோவைதரேற்று" அதிகளவில் அடங்கியுள்ள உணவு வகை,
(1) பருப்பு (2) இறைச்சி (3) சோறு

(33) "வெசாக்" பண்டிகை கொண்டாடப்படுவது,
(1) பௌத்த சமயத்தவரால் (2) கிறிஸ்தவ சமயத்தவரால் (3) இஸ்லாம் சமயத்தவரால்

(34) "அரிவாள்" மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்,
(1) வயல் உழுதல் (2) அரிவி வெட்டுதல் (3) வயலில் சேற்றை மட்டப்படுத்தல்

(35) சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ள மழைமானி,

(1)

(2)

(3)


(36) கீரை வகைகளைச் சமைக்கும்போது அவற்றின் போசணைகள் குறையாதவாறு பாதுகாத்துக்கொள்ள செய்ய வேண்டியது.
(1) கீரை வகைகளைக் கழுவாது சமைக்க வேண்டும். (2) கீரை வகைகளை வெட்டிய பின்னர் கழுவ வேண்டும்
(3) கீரை வகைகளைக் கழுவிய பின்னர் வெட்ட வேண்டும்.

(37) கொழுப்பு அதிகம் அடங்கியுள்ள உணவு வகை,
(1) கிழங்கு வகை (2) கருவாடு (3) நிலக்கடலை

(38) பின்வரும் வித்துக்களில் அளவில் மிகச்சிறிய வித்து,
(1) புடோல் (2) கடுகு (3) பயறு

(39) ஈர மண்ணில் புதைத்தல் அல்லது உப்பிடல் மூலம் நீண்ட நாட்களுக்குப் பழுதடையாமல் பாதுகாத்து வைக்கக்கூடிய உணவுப் பொருள்,
(1) எலுமிச்சை (2) பலாக்கொட்டை (3) கொறுக்காய்

(40) குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு பொலிசாருக்கு உதவக்கூடிய பிராணி,
(1) குதிரை (2) புறா (3) நாய்

(41) கரும்பு, உணவைச் சேமித்து வைத்திருப்பது,
(1) இலைகளில் (2) தண்டில் (3) ஆணிவேரில்

(42) ஈசல்கள் பறப்பதன் மூலம் நாம் அறிந்து கொள்ளக்கூடியது,
(1) மழை பெய்யும் என்பதாகும். (2) கோடைக்காலம் நெருங்குகிறது என்பதாகும்.
(3) மண்சரிவு ஏற்படப் போகின்றது என்பதாகும்.

kalvi.lk

(43) சூழலுக்கு நன்மை செய்யும் பிராணி ஒன்றல்லாதது,

(1) தேனீ (2) காகம் (3) நுளம்பு

(44) சட்டக்காந்தங்கள் இரண்டின் ஒத்த முனைகளை ஒன்றுக்கொன்று அருகில் வைக்கும்போது நிகழ்வது,

(1) கவரும் (2) தள்ளும் (3) எதுவும் நிகழாது

(45) திசையறி கருவியின் அம்புக்குறி காட்டும் திசை,

(1) வடக்குத் திசை (2) தெற்குத் திசை (3) கிழக்குத் திசை

(46) இலங்கையில் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள · மாகாணம்,

(1) வட மாகாணம் (2) தென் மாகாணம் (3) கிழக்கு மாகாணம்

(47) வாகனமொன்றில் மஞ்சள் நிற விளக்கு ஒளிர்வது,

(1) வாகனம் பின்னோக்கிச் செல்லும்போது (2) வாகனம் வலப்பக்கமாகவோ இடப்பக்கமாகவோ திரும்பும்போது

(3) வாகனத்தை நிறுத்தும்போது

(48) இனிப்பான உணவுகளையும், மாப்பொருள் உணவுகளையும் அதிகமாக உட்கொள்வதால் ஏற்படக்கூடிய நோய்,

(1) நீரிழிவு (2) சின்னமுத்து (3) கொப்பளிப்பான்

(49) வானவில்லில் உள்ள வர்ணங்களின் எண்ணிக்கை,

(1) 9 (2) 7 (3) 5

(50) நாய், பூனை மற்றும் குரங்கின் மூலம் எமக்கு ஏற்படக்கூடிய நோய்,

(1) நீர்வெறுப்பு (2) கொள்ளை நோய் (3) ஆனைக்கால் நோய்

(51) நுளம்புகளை விரட்டுவதற்காக இலைகள் எரித்துப் புகையூட்டப்படும் தாவரம்,

(1) இஞ்சி (2) நன்னாரி (3) துளசி

(52) இரவு நேரத்தில் பூக்கும் பூ,

(1) நீலோற்பலம் (2) கடுபுல் (3) அந்திமந்தாரை

(53) காலை வேளையில் சூரிய ஒளியிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய விற்றமின்,

(1) விற்றமின் D (2) விற்றமின் C (3) விற்றமின் B

(54) இலங்கையின் அரச இலச்சினையில் நிறைகுடம் குறிப்பது,

(1) தன்னிறைவையாகும். (2) சௌபாக்கியத்தையாகும். (3) தார்மீகத்தையாகும்.

(55) மாலை நேரத்தில் எமக்கு வானவில் தென்படுவது,

(1) மேற்கு வானில் (2) வடக்கு வானில் (3) கிழக்கு வானில்

(56) ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி கொண்டாடப்படுவதல்லாதது,

(1) சர்வதேச சிறுவர் தினம் (2) சர்வதேச சுற்றாடல் தினம் (3) சர்வதேச முதியோர் தினம்

(57) மூல வர்ணங்களின் எண்ணிக்கை,

(1) 4 (2) 2 (3) 3

(58) கலாசூரி ஆனந்த சமரகோன் அவர்கள்,

(1) இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர். (2) இலங்கையின் தேசிய இலச்சினையை வடிவமைத்தவர்.

(3) இலங்கையின் தேசியக் கொடியை வடிவமைத்தவர்.

(59) தாளம் போடுவதற்குப் பயன்படுத்தப்படும் சங்கீத உபகரணம்,

(1) நாதஸ்வரம் (2) கைத்தாளம் (3) வயலின்

**(60) "நான் வீதியில் விழுந்துக்கிடந்த அணிற்குஞ்சு ஒன்றை காகங்களிடமிருந்து காப்பாற்றினேன்." எனும் தலைப்பின் கீழ் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்பும், எழுத்துக் கூட்டலும் சரியாக அமைந்திருத்தல் வேண்டும்.)**

(1) ..............................................................................................................

(2) ..............................................................................................................

kalvi.lk

(3) ..............................................................................................................